மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 387, திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

387—

மின் கட்டண பாக்கித் தொகையை வசூல் செய்ய நடவடிக்கை.

* 3419—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28—2—1991 தேதியில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் பாக்கி வைத்திருப்போரின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களிடமிருந்து அப் பாக்கித் தொகையை வசூல் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 28—2—1991 ஆம் தேதியில் 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் பாக்கியை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 161. இன்றைக்குப் பெரும்பாலான மின் உபயோகிப்பாளர்கள் வழக்கு மன்றத்திலே சென்று தடைகளை வாங்கியிருக்கின்றார்கள். அந்தத் தடைகளையெல்லாம் நீக்குவதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவி அவர்களுடைய ஆட்சி பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே இந்த மின் கட்டண பாக்கிகளை வசூலிக்க வேண்டும் என்று முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தடை உத்தரவுகள் எல்லாம் ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த முறையிலே இதை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியும் இது தொடர்புடைய கேள்வியாக இருக்கின்ற காரணத்தினால் அதுவும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. வினா எண். 388. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.